6. அரசினர் தீர்மானம்

விதி 32 ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 15-3-2002 ஆம் நாளன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (குறுக்கீடு)

நாளைக்கு டைம் போதாது அல்லவா? (குறுக்கீடு) We are going to waive only the Question Hour tomorrow, for want of time.

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்ததை நான் மறுக்கவில்லை. ஆனால் எங்களுடைய குறை என்னவென்றால்,* you have to consult us.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: This is just to enable (Interruption) No. no. Hon. Deputy Speaker Sir, this is only to enable Hon. Duraimurugan to have more time for his speech. *உங்களுக்கு நாளைக்கு நிறையப் பேசுவதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற நோக்கோடு . . .*

திரு. துரைமுருகன்: *நான் உங்களுடைய தீர்மானத்திற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், மரபு என்னவென்று கேட்டால், கேள்வி நேரத்தை ஒதுக்கி வைப்பதிலே இப்படித் தீர்மானம் கொண்டு வரலாமா என்று* un-official-*ஆகக் கேட்பார்கள். அதைத்தான் நான் தெரிவித்தேன், எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்று. நீங்கள் தீர்மானம் கொண்டு வருவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

2002 மார்ச் 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி, நீங்கள் நாளைக்குப் பேசுங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-3-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS